## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. தமிழ்நாட்டிற்கான கல்விநிதியின் நிலை என்ன ?**

**ஆ.ராசா!**



சமக்ரா சிக்ஷா அபியான் மற்றும் PM SHRI திட்டங்களின்கீழ் கடந்த இரண்டுஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டநிதியின்விவரங்களைவெளியிட வேண்டும்எனதிமுக.எம்.பி.ஆ.ராசா மக்களவையில்இன்றுகேள்விஎழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டைபோல் புதிய கல்விக் கொள்கையை(NEP)ஏற்காதமாநிலங்களுக்குநடப்பாண்டில்இந்தத்திட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை என்பது ஏற்புடையது அல்ல என்றும் கல்வித் துறை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின்வளர்ச்சிநலன்கருதி ஒன்றிய அரசு உடனடியாக நிதியை விடுவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

**2. மருந்து தொழில்துறை ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பை உறுதி செய்க!**

**தயாநிதி மாறன்! – செல்வகணபதி கூட்டு அறிக்கை!**

மருந்து தொழில்துறை ஊழியர்களின்வேலைபாதுகாப்பைஉறுதிசெய்வதை வலியுறுத்தி திமுக எம்.பி தயாநிதி மாறன் மற்றும் திமுக எம்.பி. செல்வகணபதி வெளியுட்டுள்ள கூட்ட





றிக்கையில் கூறியிருப்பதாவது :

நாடு முழுவதுமுள்ள மருத்துவ தொழில் சார்ந்த விற்பனை பிரதிநிதிகளின் வேலைநிலையை மேம்படுத்துவதுகுறித்துஅரசு,மருந்து தொழில்துறைபிரதிநிதிகள்,அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் அகில இந்திய விற்பனை ஊக்குவிப்பு ஊழியர்களின்கூட்டமைப்புஇடையேயானதொழில்துறைமுத்தரப்புகுழுக் கூட்டம்10.08.2017அன்றுநடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மருத்துவ சேவைமற்றும்பணிநிலைமைகளை மேம்படுத்துதல்குறித்தவிதிகள்வகுக்கப்பட்டுள்ளதா?விற்பனைபிரதிநிதிகள் மற்றும் அது சார்ந்த அனைவரிடமும் இது தொடர்பாக கருத்துக்கள் கேட்கப்பட்டதா? விற்பனை ஊக்குவிப்பு ஊழியர்களின்(நிபந்தனைசேவை)சட்டம் 1976, பிரிவு 12 இன் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்டபடி விற்பனை ஊழியர்களுக்குஎந்தவிதிகளும்இல்லைஎன்பதும் உண்மையா?

மருந்துநிறுவனங்கள்அதன்ஊழியர்களை ஆட்குறைப்பு செய்வதை பெரிய அளவில் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்மற்றும்அவர்களின் வேலை பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

**3. தொடர்ந்து அதிகரிக்கும் விமானக் கட்டணம். நடவடிக்கை என்ன?**

**பி. வில்சன்**



கடந்த ஆறு காலாண்டுகளில் உள்நாட்டுவிமான கட்டணம்40%க்கு மேல் அதிகரித்துள்ளதைகுறித்துமாநிலங்களவையில் இன்று கேள்வி எழுப்பியுள்ள திமுக எம்.பி. பி. வில்சன், மேலும் நாட்டிலுள்ள விமான போக்குவரத்து நிறுவனங்கள் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி விமான கட்டணத்தை அதிகரிக்கச் செய்கின்றனர். இதை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

அதிகவிமானநிலையக்கட்டணங்கள் வசூலிப்பதில் உலகிலேயே இந்தியாமுதலிடத்தில்இருப்பதாகக்குறிப்பிட்டுசர்வதேசவிமானபோக்குவரத்து சங்கம் அறிக்கை விடுத்துள்ளது, இதற்கு ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டும்.

விமான நிலையங்கள் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் தற்போதுள்ள விமான நிலையக் கட்டணங்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறதா என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

**4. உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்த கோரிக்கை**

**டி.எம். கதிர் ஆனந்த்!**



தமிழ்நாட்டில் குறிப்பாகவேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்உணவுப் பதப்படுத்தும் தொழில்களை (FPI) மேம்படுத்துவதற்கும்முன்னேற்றுவதற்கும்ஒன்றியஅரசுமுன்மொழிந்துள்ளசிறப்புத் திட்டங்களின் விவரங்கள், உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு ஆதரவாகபழக்கூழ், சேமிப்பு மற்றும்பேக்கேஜ் தொழில்களை நிறுவுவதற்கு ஒன்றியஅரசாங்கத்தால்எடுக்கப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் வெளியிட வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

**5. வெள்ளக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் என்ன?**

**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு!**



தமிழ்நாட்டில்வெள்ளத்தால்பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் வெள்ள அபாய பகுதிகளில் வடிகால்கள் ஏற்படுத்தவும் ஒன்றிய அரசு இதுவரையில் செயல்படுத்தியுள்ளதிட்டங்கள்பற்றியவிவரங்கள் கேட்டு தி.மு.க. எம்.பி. டாக்டர். கனிமொழி என்விஎன் சோமு மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். ஏற்கனவேதொடங்கப்பட்டுள்ளவெள்ளக்கட்டுப்பாடுமற்றும்வடிகால்திட்டங்கள் குறித்த விவரங்களும் அதன் பயன்களின்விவரங்களையும்வெளியிட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

**6. சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் நிலை என்ன?**

**எம். எம். அப்துல்லா!**



சுயதொழில் மற்றும் வருமானம் ஈட்டுவதற்காக தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதிக் கழகம் (NMDFC)சிறுபான்மையினருக்கு வழங்கும்சலுகைநிதித்திட்டங்களின் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கிய நிதியின் விவரங்களையும் வெளியிடுமாறு திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம். எம். அப்துல்லா இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்தஐந்தாண்டுகளில்தமிழ்நாட்டில்பயன்பெற்றவர்களின்விவரங்கள் துறைவாரியாக மற்றும் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறுபான்மையினருக்கு இத்திட்டம் சென்றடைவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனவும் அவர் கேட்டுள்ளார்.

**7. கல்வியில் பின்தங்கியவை என கண்டறியப்பட்ட மாவட்டங்களின் நிலை என்ன?**

**ஈஸ்வரசாமி கேள்வி!**



கடந்த ஐந்து ஆண்டுகளில் எடுத்தகணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்கள்எனகண்டறியப்பட்டமாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களைவெளியிடவேண்டும்எனதிமுக எம்.பி. ஈஸ்வரசாமி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் இந்த மாவட்டங்களில் உள்ள SC மற்றும்STமக்கள்தொகைசதவீதம்,தமிழ்நாட்டில் SC/ST மக்கள்தொகை அதிகமுள்ள பகுதிகளில் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களை அரசு கண்டறிந்திருந்தால் அதன் விவரங்களை வெளியிட வேண்டும், அந்த பகுதிகளில் கல்வியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள்/முயற்சிகளின் விவரங்கள், இந்தமாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு நிதி, உதவித் தொகை திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டங்கள் என்னென்ன?.

---

### துணை முதல்வர் பிறந்தநாள்: வட்டச் செயலாளர் ஆர்.பாபு தலைமை! ஆயிரம் விளக்கு

## 111வது வட்டத்தில் நல உதவிகள்: நே.சிற்றரசு வழங்குகிறார்!

### பசும்பொன் ரவிச்சந்திரன் – ஜெயகுமரேஷ் சிறப்புரை!

### தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – நா. எழிலன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*சென்னை, டிச.10-*

சென்னைமேற்குமாவட்டம் - ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி - 111வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின்பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டமும் நல உதவிகள்வழங்கும்நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இன்று(10.12.2024-செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் குலாம் அப்பாஸ் அலிகான் 7வது தெருவில்நடைபெறும்இவ்விழாவிற்கு வட்டச் செயலாளர் ஆயிரம்விளக்கு ஆர்.பாபு தலைமை வகிக்கிறார்.

ஆயிரம்விளக்குகிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, மாவட்ட துணைச்செயலாளர்வி.எஸ். கலைச்செல்வன், எம்.வெற்றிச் செல்வி மாணிக்கம் ஆகியோர்முன்னிலைவகிக்கின்றனர்.

த.டேனியல், எம்.ஏ. நந்தினி, ஹெச்.ஜானி, என்.அங்காளம், வி.எஸ்.கவாஸ்கர், ஜான் பீட்டர் ஆபிரகாம், ஜி . மாணிக்கம் , சி.பார்த்தசாரதி, டி.அருள்தாஸ், பி.பவானி, டி.இராஜாராம், பி.உமா சங்கர், டி. வெங்கடேசன் , ஜி.சுந்தர்ராஜன், என்.மணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் - மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு - நல உதவிகள் வழங்குகிறார்.

தலைமைக்கழகப்பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், ஜெயகுமரேஷ், தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவ அணியின் மாநில செயலாளர்டாக்டர்நா.எழிலன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நுங்கை வி.எஸ்.ராஜ், எஸ்.அழகிரிசதாசிவம், எஸ். கலைக்கதிரவன், வி.கௌதமன், பி.பிரகாஷ், துபாய் வி.ஆர்.விஜய், கே.ஜே.சரவணன், து.விக்டர், ஆர்.என். துரை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, எம்.டி.ஆர். நாதன், ஜெ.நற்குணநாதன், பா.ராபர்ட் உள்படபலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

ஏ. கமலக்கண்ணன், பி.விஸ்வநாதன், எஸ்.எஸ்.' ராம்போ' பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர், திருவொற்றியூரில் புதியதாக கட்டியுள்ள புதுமனை புகு விழாவில் கழக மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வாழ்த்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

### எம்.எஸ். ஷேக்தாவூத் தலைமை: இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி -தா.மோகன்குமார், சைதை சாதிக் முன்னிலை

## சைதை 168அ வட்டத்தில் உதயநிதி உதயநாள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இந்திரகுமார் தேரடி - தி.தினேஷ்பாபு சிறப்புரை!

*சென்னை, டிச. 10-*

சென்னைதெற்குமாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சிறுபான்மை நல உரிமைப்பிரிவுசார்பில்சார்பில் இன்று (10.12.2024 செவ்வாய் கிழமை) மாலை 5.30 மணிக்கு 168அ வட்டம் சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலைமுதல்தெருவில்பகுதி சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எம். எஸ். ஷேக்தாவுத் தலைமையில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் மண்டலகுழுத் தலைவர் இரா. துரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளர் வார்டுகுழுதலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, தா. மோகன் குமார் எம்.சி., மாவட்ட சிறுபான்மை நல உரிமைபிரிவுஅமைப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் துணை முதலமைச்சர் உதயநிதியின் உதயநாள் பொதுக்கூட்டத்தில் மாவட்டபிரதிநிதி ச. சேகர், பகுதிஇளைஞரணிஅமைப்பாளர் கொடி. பாலா வட்ட நிர்வாகிகள் ஏ. சீனிவாசன், த.பாண்டியன், மீனா, பரமானந்தம் ,ஜி. என். நாராயணன், ஈகை ஹரியப்பன், என். மேகநாதன், எம். லிங்கேஸ்வரன், டி.மனோகரன், ஜி. வெங்கடேசன் மற்றும் மே. குணா வரவேற்கின்றனர்

பொதுத் கூட்டத்தில் அமைச்சர் - மாவட்ட செயலாளர் மா.சுபபிரமணியன், தலைமைக் கழக பேச்சாளர் இந்திரா குமார் தேரடி, இளம் சொற்பொழிவாளர் தி. தினேஷ்பாபு ஆகியோர் கழக அரசின் சாதனைகளையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மக்களுக்கு ஆற்றி வரும் பணிகளையும் விளக்கி உரை நிகழ்த்து கின்றார்கள் .

இக்கூட்டத்தில்தமிழச்சி தங்கபாண்டியன்எம்.பி. துணை மேயர் மு. மகேஷ்குமார், எஸ். குணசேகரன், தொகுதி மேலிடப்பார்வையாளர் பரிதி இளம் சுருதி, பொதுக்குழுஉறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் இ. முருகேசன், ஆர். ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு. பாக்கியலட்சுமி, வட்டச்செயலாளர்கள் நா. ராதாகிருஷ்ணன், எல் . ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம்க.மணி, கோட்டூர்கோ. சண்முகம், நேரு நகர் எஸ் பாட்சா, எஸ் ஆர் செந்தில், மாவட்டபிரதிநிதிகள்டி.வி. நரசிம்மன், வே. முருகன், ஜி செல்வராஜ், க. உமாபதி, என். நந்தகோபால், எஸ். ராதாகிருஷ்ணன், ஏ.மஜித், எஸ். ஜெ. சலாம், இரா. சுதாபிரியன், கோட்டூர் ந. பாபு, கே. எம். எஸ். கணேசன், மு.மகேஷ் லாரன்ஸ், ஜி. யோவான், வே.ரமேஷ்குமார், கழக பேச்சாளர்கள் ஈகை கோ.தனசேகரன், க. ஒப்பிலாமணி, மற்றும் க.வேல்முருகன், பி.செல்வம் ஜான், அகஸ்டின், எஸ். கரிமுல்லா, எஸ்.ஜே. அன்புரோஸ், ,எஸ்.பரமாணந்தம், ஜி.சி. ரவிராஜ், வி.சி. லட்சுமணன், பி.ஆகாசம், ஏ.அப்பாஸ் ,எல். ஜெபமாலை, கே.என். வீரராகவன், ஆர். ராஜேஷ், ஏ. சரவணன், என். சிலம்பரசன், எஸ்.நாகவேல், பி. ஜெகதீஷ் ,நிர்மல் குமார் ,எஸ்.மல்லிகா, உமா, ஈ. தனசேகரன்எம். ராஜிஎஸ். தேவி எஸ். அறிவானந்தம், கு. வீராசாமி, கு. மோகன், கே.ராஜாராம், மா. ராஜ்குமார், ஆர். குப்பன், டி.தாஸ் சார்லஸ் மூவேந்தன், மா. சாம் (என) சாமுவேல், எம்.நூருல்லா, ஆர்.எஸ்.டி. கோட்டீஸ்வரன் அப்துல் பாஷா டி. ஜோசப் எம். அப்துல் ரஹ்மான் கா.முகமதலி (எ) உசேன் வட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ். பகவதி எம். தண்டபாணி டி. இளையராஜா எம். நந்தகுமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்தில் பார்சன் லோகு, எல். எலின்செல்வம், வா. சாமுவேல் ஆகியோர் நன்றி கூறுகன்றனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் காமராஜர் காலனி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு புத்தகபை, நோட்டு, புத்தகம், எழுது பொருட்கள் ஆகியவற்றை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் வழங்கினர். உடன் கோடம்பாக்கம் மு.சத்யா,கோ.சு. மணி மற்றும் மாவட்டக் கழக பகுதி கழக நிர்வாகிகள் வட்டக கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.சுந்தர்,பிலிப்,பி.எஸ்.ராசன், இ.அஸ்வின்குமார், ஏ.நோபல், ஏ.கார்த்திக், ஆர்.பரத் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.வி. ரங்கப்பன்

### டிசம்பர் 10 (2001)



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஈரோடு ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.என்.புதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 1970 முதல் மூன்று முறை ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1998ல் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**அத்துடன் கோவை–பெரியார் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைப் பொதுச்செயலாளராகவும் – ஈரோடு நிலவள வங்கித் தலைவராகவும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**